**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை செல்வி.A. யுகாதிமரியா, B.Com.L.L.B(Hons.,)**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை.**

**2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 07 ம் நாள் செவ்வாய்கிழமை**

**அசல் வழக்கு எண்.174/2022**

**இ.ம.எண்.10/2026**

1) சண்முகம்

2) பழனியம்மாள்

3) சரவணன்

4) கிருஷ்ணன் (எ) வீரபத்திரன் **...மனுதாரர்கள்/3 முதல் 6 வரையான பிரதிவாதிகள்**

**/எதிர்/**

முத்துலெட்சுமி **..எதிர்மனுதாரர்/வாதி**

இம்மனு எனது முன்னிலையில் கடந்த 16.03.2026ம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.R.பாலசுப்ரமணியன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.சக்திவேல் அவர்கள் முன்னிலையாகியும் மற்றும் இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்:

**உத்தரவு**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 8, விதி 1(A)(3) உடனிணைந்த பிரிவு 151ன் கீழ் மனுதாரர்கள்/3 முதல் 6 வரையான பிரதிவாதிகளால் மேற்படி அசல் வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் கூடுதல் ஆவணங்கள் தாக்கல் செய்ய அனுமதி வேண்டி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>மனுதாரர்கள் மனுவின் சுருக்கம்:</u>**

**2)** மனுதாரர் மேற்படி அசல் வழக்கின் 5ம் பிரதிவாதியாவார். மேற்படி வழக்கு மனுதாரர் தரப்பு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. மனுவில் கண்ட ஆதரவுகள் இந்த வழக்குக்கு மிகவும் முக்கியமானவை. மனுவில் கண்ட ஆதரவுகளை உரிய காலத்தில் மனுதாரர்களால் தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டது. மனுதாரர்கள் வேண்டுமென்றே மேற்படி ஆதரவுகளை உரிய காலத்தில் தாக்கல் செய்யாமல் இருக்கவில்லை. மனுவில் கண்ட ஆதரவுகளை உரிய காலத்தில் தாக்கல் செய்யாததை மன்னித்து தற்போது தாக்கல் செய்வதை ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லாவிடில் மனுதாரர்களுக்கு ஏராளமான கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும். பிரதிவாதிகள் தரப்பில் ஆவணங்களை முன்பே சமர்பிக்காத தவறுதலை மன்னித்து, தற்சமயம் இம்மனுவுடன் தாக்கல் செய்யும் ஆவணங்களை பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. மேற்படி மனுவை ஏற்பதால், எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்டமும், நஷ்டமும் ஏற்படாது. மாறாக, இம்மனுவை அனுமதிக்காவிடில், மனுதாரர்களுக்கு மிகுந்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டுவிடும். எனவே, இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்மனுவுரையின் சுருக்கம்:</u>**

**3)** மனுதாரரின் மனு நிலைநிற்கத்தக்கதல்ல. மனுதாரர் மனு தள்ளுபடி செய்யத்க்கது. மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளில், இந்த எதிர்மனுதாரர்/வாதி வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர, மற்றவைகளை இந்த மனுதாரரே நிரூபிக்கக் கடமைப்பட்டவர் ஆவார்.

**4)** மேற்படி, அசல் வழக்கில் எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள தாவா சொத்தின் புல எண், 1ம் பிரதிவாதியின் பெயரில் உள்ள பட்டா எண்.3529 என்ற எண்ணில் கீழப்பகுதி கிராம புல எண்.495/1Cல் ஹெக்.0.21 ஏர்ஸ் மற்றும் புல

எண்.495/1Fல் ஹெக்.0.18.20 ஏர்ஸ் நிலம் பாகமாக ஏற்பட்டு 1ம் பிரதிவாதி பெயரில் தனிப்பட்டா எண்.3529 ஏற்பட்டுள்ளது. ஆகவே, இந்த மனுவின் மனுதாரர்கள் மேற்படி அசல் வழக்கிற்கு எவ்வித தொடர்பும் இல்லாத மற்ற புல எண்களான 495/1A, 495/1B, 495/1D, 495/1E என்ற தேவையற்ற புல எண்கள் கொண்ட சொத்துக்களை, பிரதிவாதிகள் தரப்பு ஆதரவாக தாக்கல் செய்ய பிரதிவாதிக்கு எவ்வித வழக்கு முகாந்திரமும் இல்லை.

**5)** தாவா சொத்தை தவிர பிரதிவாதிகள்/1 முதல் 3 வரையான மனுதாரர்கள் இந்த வழக்கிற்கு எவ்வித தொடர்பும் இல்லாத சொத்துக்களை இந்த மனுவில் மனுதாரர் தரப்பு ஆவணங்களாக தாக்கல் செய்துள்ளது இந்த வழக்கின் வாதியின் வழக்கிற்கு குந்தகமும், வழக்கை கால தாமதம் செய்யும் நோக்கத்துடனும் மனுதாரர்கள் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். எனவே, இம்மனுவானது எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**<u>தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வி:</u>**

**6)** மனுதாரரின் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வியாகும்.

**<u>சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>**

**7)** இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியம் இல்லை. ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**<u>தீர்வு:</u>**

**8)** இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கு கோப்புகளைப் பரிசீலனை செய்கையில், மேற்படி

அசல் வழக்கானது, 3 முதல் 6 வரையான பிரதிவாதிகளுக்கு 1ம் பிரதிவாதி கடந்த 22.11.2006 அன்று புல எண்.495/1Fல் 0.10 சென்ட் நிலத்தைப் பொறுத்து கிரையம் செய்து கொடுத்து, தரகம்பட்டி சார்-பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.1472 ஆவணத்தை செல்லத்தக்கதல்ல என விளம்புகை செய்ய விளம்புகை பரிகாரத்திற்காக எதிர்மனுதாரர்/வாதியால் மனுதாரர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது. இந்நிலையில், மேற்படி அசல் வழக்கில் வாதி தரப்பு வழக்கு விசாரணை முடிக்கப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பு விசாரணை தொடங்கப்பட்டு, 3 முதல் 6 வரையான பிரதிவாதிகள் தரப்பில் 5ம் பிரதிவாதி சரவணன் என்பவர் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பில் வேறு எவ்விதமான ஆவணங்களும் தாக்கல் செய்யாமல் உள்ள நிலையில், இம்மனுவானது 3 முதல் 6 வரையான பிரதிவாதிகள் தரப்பில், மனுவில் கண்ட ஆவணங்களை மேற்படி அசல் வழக்கில் 3 முதல் 6 வரையான பிரதிவாதிகள் தரப்பு ஆவணங்களாக தாக்கல் செய்ய அனுமதி வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**9)** மனுதாரர்கள் தரப்பில் மனுவில் கண்ட ஆவணங்கள் மேற்படி அசல் வழக்கில் பிரதிவாதிகளின் கட்சியை நிரூபணம் செய்ய அவசியமான ஆவணங்கள் என்றும், மேற்கண்ட ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்ய முடியாமல் போய்விட்டது என்றும், வேண்டுமென்றே மனுவில் கண்ட ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்யாமல் மனுதாரர்கள் இருக்கவில்லை என்றும், மேற்கண்ட தவறுதலை மன்னித்து இம்மனுவை நீதியின் பொருட்டு அனுமதிக்க வேண்டி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மாறாக, எதிர்மனுதாரர் தரப்பில், மனுவில் கண்ட ஆவணங்கள் யாவும் தாவா சொத்திற்கு சம்மந்தம் இல்லாத தேவையற்ற புல எண்கள் கொண்ட சொத்துக்களைப் பொறுத்த பிரதிவாதிகள் தரப்பு ஆதரவுகள் என்றும், மனுவில் கண்ட ஆவணங்களுக்கும், தாவா சொத்திற்கும், மேற்படி அசல் வழக்கிற்கும் எவ்வித

சம்மந்தமும் இல்லை என்றும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**10)** இரு தரப்பு வாதங்களையும், வழக்கு கோப்புகளையும் பரிசீலனை செய்ததில், மேற்படி அசல் வழக்கானது தாவா சொத்தைப் பொறுத்து பிரதிவாதிகளுக்கிடையே ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட கிரைய ஆவணத்தை செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை செய்ய வேண்டி விளம்புகை பரிகாரத்திற்காக இந்த எதிர்மனுதாரர்/வாதியால் மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது. மேற்கண்ட அசல் வழக்கானது பிரதிவாதிகள் தரப்பில் சாட்சி விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டு, 5ம் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ள நிலையில், மனுவில் கண்ட ஆவணங்களை மேற்கண்ட அசல் வழக்கில் 3 முதல் 6 வரையான பிரதிவாதிகள் தரப்பில் கூடுதல் ஆவணங்களாக தாக்கல் செய்ய அனுமதி வேண்டி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவில் கண்ட ஆவணங்கள் தற்போதுதான் மனுதாரர்களுக்கு கிடைக்கப்பெற்றது என்றும், மனுதாரர்கள் உரிய காலத்தில் மனுவில் கண்ட ஆவணங்களை மேற்படி அசல் வழக்கில் தாக்கல் செய்யாமல் இருக்கவில்லை என்றும், மனுதாரர்களால் கூறப்பட்டுள்ள காரணங்களானது நீதியின் பொருட்டு ஏற்றுக்கொள்ளத்தக்க காரணங்களாக உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**11)** மேலும், மேற்படி அசல் வழக்கில் இரு தரப்பினர்களுக்கும் தகுந்த வாய்ப்புகள் அளித்து முழுமையான வழக்கு விசாரணைக்கு பின்பு, இரு தரப்பினராலும் முன்னிலைப்படுத்தப்படும் சாட்சி மற்றும் தாக்கல் செய்யப்படும் சான்றாவணங்களை பரிசீலனை செய்வதன் அடிப்படையில் மட்டுமே, இந்நீதிமன்றத்தால் முழுமையான நீதி பரிபாலனம் இரு தரப்பினர்களுக்கும் வழங்கமுடியும் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, மனுதாரர்களுக்கு மனுவில் கண்ட ஆவணங்களை மேற்படி அசல் வழக்கில் மனுதாரர்கள்/3 முதல்

6 வரையான பிரதிவாதிகள் தரப்பு ஆவணங்களாக தாக்கல் செய்ய அனுமதிப்பது நீதியின் பொருட்டு அவசியமானது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**12)** மேலும், எதிர்மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ள ஆட்சேபனையைப் பொறுத்து, இம்மனுவில் தீர்மானம் செய்யப்படமுடியாது என்றும், மேற்படி அசல் வழக்கில் இரு தரப்பினர்களுக்கும் வாய்ப்புகள் அளித்த பின்பு, வழக்கு விசாரணைக்கு பின்பு மட்டுமே மனுவில் கண்ட ஆவணங்களின் ஏற்புடைத்தன்மை பொறுத்தும், எதிர்மனுதாரரால் சொல்லப்பட்டுள்ள ஆட்சேபனைகளை பொறுத்தும், மனுவில் கண்ட ஆவணங்கள் மேற்படி அசல் வழக்கில் ஏற்கத்தக்க ஆவணங்களா இல்லையா என்றும், வழக்கு இறுதியில் மட்டுமே இந்நீதிமன்றத்தால் முடிவு செய்யமுடியும் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**13)** மேலும், இம்மனுவை அனுமதிக்காவிட்டால் எதிர்மனுதாரரை விட மனுதாரர்களுக்கே அதிகப்படியான இழப்பும், கஷ்டமும் ஏற்படும் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும், இம்மனுவை அனுமதிப்பதன் மூலம், எதிர்மனுதாரர்/வாதிக்கு மனுவில் கண்ட ஆவணங்களைப் பொறுத்து அசல் வழக்கு விசாரணையின்போது ஆட்சேபனை செய்யவும், அவற்றைப் பொறுத்து சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவும் அனைத்து வகையிலும் வாய்ப்புகள் உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

**முடிவாக,**

மேற்சொன்ன காரணங்களுக்காக, இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகின்றது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது, என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பு எடுக்கப்பட்டு, பின்பு கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07ம் தேதியாகிய இன்று அவையறிய பகிரப்பட்டது.

YUGHATHY MARIYA
Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2026.04.07 15:31:28 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை**

| | | |
|---|---|---|
| மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் | – | இல்லை |
| எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் | – | இல்லை |

YUGHATHY MARIYA
Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2026.04.07 15:31:33 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை**